## நகர்மன்ற சாதாரண கூட்டப்பொருள்

2018ம் ஆண்டு நவம்பர் மாதம் 30.11.2018தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள சாதாரண கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் 1**

நகராட்சி ஆணையர் அவர்களது செப்டம்பர் 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் ( ந.க.எண். 2105/2011/சி1)

நகர மன்ற தீர்மானம் எண்:- 413 நாள் 30.11.2018
அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண் 2**

நகராட்சி பொறியாளர் அவர்களது செப்டம்பர் 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் ( ந.க.எண். 2105/2011/சி1)

நகர மன்ற தீர்மானம் எண்:- 414 நாள் 30.11.2018
அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண் 3**

கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 01.04.2018 முதல் புதிதாக வரி விதிப்பு செய்ய அரசாணை நிலை எண் 73 மற்றும் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018 மற்றும் 26.7.2018ன் படி மண்டல மதிப்பு உயர்வு செய்து நகர்மன்ற தீர்மான எண் 377ன்படி அனுமதி பெறப்பட்டு 10.09.2018ம் தேதிய தினத்தந்தி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு ஆட்சேபனை மனுக்கள் ஏதுமிருப்பின் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டதில் பொதுமக்கள் முஸ்லிம் ஜமாத்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து 313 ஆட்சேபனை மனுக்கள் பெறப்பட்டது அதன்படி மேற்படி மனுக்களை சீராய்வு செய்து மண்டல மதிப்பீடு நிர்ணயம் செய்யப்பட்ட கண்காணிப்பு குழுவினரால் 22.10.2018 தேதியன்று மண்டல மதிப்பு மாற்றம் செய்யப்பட்டு இ.ந.ம.து.எண் 402 நாள் 26.10.2018ன்படி அனுப்பி வழங்கப்பட்டதால் தமிழ் நாடு மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யுமாறு கோரப்பட்டது. அதன்படி புதுக்கோட்டை அரசு கிளை அச்சக கிளை மேலாளரின் 9.11.2018ம் தேதிய ந.க.எண்40/திட்டம்/2018ன் படி ரூ.10,500/. அரசு கணக்கில் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதியும் உடனடியாக வருவாயினை பெருக்கவும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை அரசு கணக்கில் செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

( ந.க.எண். 1105/2018/அ1)

நகர மன்ற தீர்மானம் எண்:- 415 நாள் 30.11.2018
அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 4

இந்நகராட்சி அலுவலக EOI 2018-2019ன் கீழ் செய்யப்பட உள்ள சமுதாய தானியங்கி குடிநீர் இயந்திரம் PPP மூலம் நிறுவி 23 வார்டுகளிலும் பராமரிப்பு செய்யும் பணிக்கு 22.10.2018ம் தேதியன்று விருப்பம் உள்ளவர்கள் தேர்வு செய்வதற்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. இதில் On-Line மூலம் கீழ்கண்ட நிறுவனத்திடமிருந்து ஒரு ஒப்பந்தபுள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் |
|---|---|
| 1 | Dharana Infrastructure Projects Pvt.Ltd.,<br>AP-887J Block 1st Street,<br>13th Main Road,<br>Anna Nagar,<br>Chennai. |

மேற்கண்டவாறு பெறப்பட்ட Dharana Infrastructure Projects Pvt.Ltd., என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி பரிசீலனை செய்து ஒப்பந்தவிதிகளில் குறிப்பிட்டவாறு தொழில் நுட்ப தகுதி அனைத்தும் நிறைவு செய்துள்ளார். மேற்படி ஒப்பந்தபுள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பெறப்பட்ட Dharana Infrastructure Projects Pvt.Ltd., என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண். 535/2018/இ1)

நகர மன்ற தீர்மானம் எண்:- 416
அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது

நாள் 30.11.2018

ஒம் / திரு. சோ.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை
தனி அலுவலர் / ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி